# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.13 (L.W.22)

| | | | |
|---|---|---|---|
| Name | : Selvi @ Senthamarai | Caste : | SC (Arunthathiyar) |
| Father's Name | : Kannan | Calling | : Coolie |
| Village | : Kilpallipattu | Religion | : Hindu |
| Taluk | : Vellore | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.01.2025.

(A1 to A6 present)

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். நான் 100 நாள் கூலி வேலை செய்கிறேன். எனக்கு 3 பிள்ளைகள். பெரிய மகள் பவித்ரா, 2 வது மகன் பெயர் கவியரசன், 3 வது மகள் இலக்கியா ஆகியோர்கள் ஆகும். என் உடன்பிறந்தவர்கள் ஒரு அண்ணன் ஒரு தம்பியாகும். என்னுடைய அண்ணன் இறந்துவிட்டார். தம்பி பெயர் பழனி. என்னுடைய மகளை, அவருடைய பாட்டி வீட்டில் வளர்த்து வந்தார்கள். என் மகள் பெரியவளாக வளர்ந்த பின்பு என் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். சில நாட்கள் கழித்து என் மகள் பவித்ரா (அ.சா.12) , தம்பி பழனிக்கு திருமணம் செய்துக் கொடுத்தேன்.

கொஞ்ச நாட்கள் கழித்து வீட்டின் சூழ்நிலை காரணமாக என் மகள் பவித்ராவை அகரம்சேரி ஷீ கம்பெனிக்கு வேலைக்கு அனுப்பினார்கள். என் மகள் பவித்ராவுக்கும், அவள் கணவருக்கும்,

அவள் மாமியாருக்கும் சின்ன சின்ன பிரச்சனை இருந்தது. அதனால் என் மகளை வேலையை விட்டு நிறுத்திவிட்டார்கள். ஷமீல்பாஷா என்பவர் என் மகள் வேலை செய்த கம்பெனியில் வேலை செய்து வந்தார். ஷமீல்பாஷா வேலை விஷயமாக பவித்ரா வீட்டிற்கு தேடி வந்ததாக என் அம்மா என்னிடம் சொன்னார்.

என் தம்பி, எனக்கு போன் செய்து, ஷமில் பாஷாவினால் சின்ன சின்ன பிரச்சனை என்று சொன்னார். 24.05.2015 ம் தேதி என் மகள் பவித்ரா காணாமல் போய்விட்டார். அந்த சமயத்தில் என் மகள் பவித்ராவிற்கு 5 வயதில் குழந்தை இருந்தது. என் மகள் அவள் 5 வயதை மகளை விட்டுவிட்டு காணாமல் போய்விட்டார். என் தம்பி, பவித்ரா காணாமல் போய்விட்டதாக போன் செய்து, என் வீட்டிற்கு வந்தாளா என்று கேட்டார். நான் வரவில்லை என்று சொன்னேன். நாங்களும் சொந்தகாரங்க வீட்டில் சென்று தேடிப்பார்த்தோம். எங்கும் பவித்ரா கிடைக்கவில்லை.

25.05.2015 ம் தேதி என் மகளை தேடிப்பார்த்தோம். 26.05.2015 ம் தேதி நான், என் தம்பி பழனி, என் கணவர் ஆகியோர்கள் பள்ளிகொண்டா காவல் நிலையம் சென்றோம். என் தம்பி பழனி புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் தேடிப்பார்ப்பதாக சொன்னார்கள். மறுநாள் தேடுவதாக சொல்லி அனுப்பினார்கள்.

27.05.2015 ம் தேதி எனக்கு போன் வந்தது. எனக்கு போன் செய்தவர் பவித்ராவின் அம்மாவா என்று கேட்டார். நான் ஆமாம் என்று சொன்னேன். அவர் ஷமில் பாஷா பேசிகிறேன். உன் மகள் இங்கு

தான் ஈரோடு வந்துள்ளதாக சொன்னார். உன் பெண்ணுக்கு புத்திமதி சொல்லி ரயில் ஏற்றி அனுப்பியுள்ளேன் என்று சொன்னார். அப்போது காலை 11 மணியிருக்கும். நான், என் தம்பிக்கு எனக்கு போன் வந்த விவரத்தை போன் செய்த சொன்னேன்.

நான், என் தம்பி மற்றும் பசங்கள் எல்லாம் சென்று காட்பாடி ரயில்வே ஸ்டேஷன் போய் பார்த்தோம். அங்கு என் மகள் கிடைக்கவில்லை. என் தம்பியிடம் சொல்லி, என் தம்பி ஜோலார்பேட்டை, ஆம்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு சொந்தக்காரரை அழைத்துக்கொண்டு சென்று என் மகள் பவித்ராவை பார்க்க சென்றார். அங்கும் என் மகள் பவித்ரா வரவில்லை.

போன் வந்ததற்கு மறுநாள் நானும், என் கணவரும் காவல் நிலையம் சென்று அங்கு இருந்தோம். ஷமில் பாஷா வீட்டினிடம் என் தம்பி மற்றும் சொந்தக்காரர்கள் பார்த்துவிட்டு இல்லையென்று வந்துவிட்டார்கள். அன்றே ஒரு மணி நேரம், 2 மணி நேரம் கழித்து ஷமில் பாஷாவை காவல் நிலையம் அழைத்து வந்தார்கள்.

03.06.2015 ம் தேதி சென்னை நீதிமன்றத்திற்கு சென்று வழக்கு கொடுத்தோம். என் மகள் காணவில்லை என்று பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு கொடுத்தோம். பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து எங்களுக்கு போன் வந்தது. அரியூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்டதில் ஒரு பெண் பிரேதம் உள்ளது உன் பெண்ணா

என்று போய் பாருங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் போய் பார்த்தோம். அது எங்கள் மகள் இல்லை என்று காவல் நிலையத்தில் சொன்னோம்.

ஷமில் பாஷா போன் செய்தார் என்றும் இந்த நேரத்தில், இந்த நெம்பரில் இருந்து போன் வந்தது என்று காவல் நிலையத்தில் போலிசாரிடம் கொடுத்தோம். அவர்கள் அந்த நெம்பருக்கு போன் செய்து ஷமில் பாஷாவை அழைத்து வந்தார்கள். ஷமில் பாஷா அழைத்து வந்தபிறகு நாங்கள் போய் பார்த்தோம். அங்கு ஷமில் பாஷாவை காவல் நிலையத்தில் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாளும் காவல் நிலையம் சென்றோம். ஷமில் பாஷா நாங்கள் விசாரித்து நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று எங்களை விசாரித்துவிட்டு அனுப்பிவிட்டார்கள். நான் ஷமில் பாஷாவை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பார்த்தேன். அ.சா.ஆ.13 ல் உள்ள ஒளிநகல் புகைப்படத்தில் உள்ள நபர் தான் ஷமில் பாஷா ஆகும். அவர் தான் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்தார். நான் அவரை பார்த்தேன்.

பள்ளிகொண்டா காவல் நிலையத்தில், ஷமில் பாஷாவை விசாரணை செய்த நபர் அதில் எதிரிகளில் யார் என்று பார்த்து சொல்ல இயலுமா என்று கேட்டதற்கு இயலும் என்றார். சாட்சி அனைத்து எதிரிகளையும் பார்த்து 1ம் எதிரி மார்ட்டின் பிரேம் ராஜ் என்று அடையாளம் காட்டுகிறார். மற்ற எதிரிகளை பொறுத்து தனக்கு

ஞாபகம் இல்லை என்று கூறினார். பின்னர் அந்த போலிஸ்காரர் நாங்களே ஷமில் பாஷாவை விசாரித்துக் கொள்கிறோம் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு நாங்கள் காவல் நிலையம் செல்லவில்லை.

பிறகு எனது மகள் பவித்ரா அம்பத்தூர் விடுதியில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டார். அதன்பின்னர் CBCID போலிசார் என்னை விசாரித்தனர். அதன்பின்னர் நீதித்துறை நடுவர் எங்கள் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார். நான் நடந்ததை சொன்னேன். எழுதிக் கொண்டார்கள். நான் சொன்ன விஷயத்தை படித்துக் காண்பித்தார்கள். சரியாக இருந்தது. அதில் நான் கைரேகை வைத்தேன்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.09 17:41:09 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.14 (L.W.23)

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Caste | : வன்னியர் |
| Father's Name | : கோபால் | Calling | : SI Retired |
| Village | : குடியாத்தம் | Religion | : NIL |
| Taluk | : குடியாத்தம் | Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.01.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை**

நான் விரிஞ்சிபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 31.05.2023 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் 1 முதல் 6 எதிரிகளை தெரியும். 1ம் எதிரி காவல் ஆய்வாளராக இருந்தார், 2ம் எதிரி ஆம்பூர் குற்றப்பிரிவில் சிறப்பு புலனாய்வில் குற்றப்பிரிவில் காவலராக இருந்தார். 3ம் எதிரி அதே குற்றப்பிரிவில் தலைமை காவலராக இருந்தார். 4ம் எதிரி அதே சிறப்பு குற்றப்பிரிவில் சிறப்பு காவல் ஆய்வாளராக இருந்தார். 5ம் எதிரி அதே சிறப்பு குற்றப்பிரிவில் காவலராக இருந்தார். 6ம் தேதி அதே குற்றப்பிரிவில் காவலராக இருந்தார். 7ம் எதிரி முனியன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.

இந்த வழக்கு சம்பவ காலத்தில் பள்ளிகொண்டா கா.நி. சிறப்பு உதவி ஆய்வாளராக 26.05.2015ம் தேதி பணிபுரிந்தபோது, பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்குட்பட்ட குச்சிபாளையம் கிராமத்தை சேர்ந்த பழனி என்பவர் நிலையம் ஆஜராகி கடந்த 24.05.2015 ல் அவருடைய மனைவி பவித்ரா என்பவர் காணவில்லை

என்று புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் பள்ளிகொண்டா கா.நி. கு.எண்.140/2015 இ.த.ச. பிரிவு woman missing என வழக்கு பதிவு செய்து, விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். பழனி சந்தேகத்தின்பேரில் 2, 3 நபர்களை சொன்னார். நான் அந்த நபர்களை விசாரணை செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் ஒளிநகல் அ.சா.ஆ.19. (அது ஒளிநகல் ஆவணம் என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்பட்டது).

பழனி சொன்ன 3 சந்தேக நபர்களை வாய்மொழியாக விசாரித்தேன். வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பவித்ரா காணாமல் போன விஷயத்தில் அவர்களுக்கு சம்மந்தம் இல்லை என்பதால் அவர்களை அனுப்பிவிட்டேன். பழனி என்பவர் என்னிடம் வந்து அவர் அக்காவான செல்வி (எ) செந்தாமரைக்கு (அ.சா.13) ஒரு unknown number ல் இருந்து தொலைபேசி அழைப்பு வந்ததாகவும், அந்த எண்ணை என்னிடம் கொடுத்தார். அதை நாங்கள் பார்க்கிறோம் என்று சொல்லி அனுப்பினேன். அதன் பின்னர் சைபர் கிரைம் போலிசுக்கு அந்த எண்ணை கொடுத்து அதன் call detail records எடுத்துக் கொடுக்க கேட்டுக் கொண்டேன்.

அப்போது பழனி எங்களிடம் அவருடைய அக்காவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டவர் பவித்ரா (அ.சா.12) அங்கு வந்துள்ளதாகவும், அந்த பெண்ணுக்கு புத்திமதி சொல்லி ரயிலில் திருப்பி அனுப்பியதாக சொன்னார்.

அதன்பின்னர் விசாரணையில் அது ஈரோடிலிருந்து வந்த தொலைபேசி எண் என்று கண்டுபிடித்தோம். அப்போது பழனியிடம் பேசிக்கொண்டு இருக்கும்போது, அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த போனை பழனி என்னிடம் கொடுத்தார். நான் பேசியபோது அந்த தொலைபேசி துண்டிக்கப்பட்டது. அதில் பேசியவர் ஷமில் பாஷா என்று பழனி சொன்னார். அந்த நபர் தான் ஏற்கனவே பழனியின் மாமியாரிடம் பேசியதாக பழனி என்னிடம் சொன்னார்.

பின்னர் பழனி சென்னை உயர்நீதிமன்றத்தில் 03.06.2015 ல் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார்.. HCP.No.1373/2015 ஆகும். பிறகு பழனி எங்களிடம் வந்து அரியூர் காவல் நிலையத்தில் ஒரு பெண்ணின் பிரேதம் கிடப்பதாக எங்களிடம் சொன்னார். பழனி போய் பார்த்தபின்னர் அது பவித்ராவின் பிரேதம் இல்லை என்று தகவலை என்னிடம் சொன்னார்.

பிறகு பழனிக்கு தெரிந்த அரியூர் காவல் நிலைய போலிசாருக்கு அந்த ஈரோடு தொலைபேசி எண்ணை கொடுத்தார். அவர் அந்த தொலைபேசி எண்ணில் உள்ள நபர் ஆம்பூரில் இருப்பதாக தகவல் சொன்னார். அதன்பின்னர் பழனியும் அவர் உறவினர்களும் ஆம்பூருக்கு சென்று, ஷமில் பாஷாவின் வீட்டினிடம் சென்று கேட்டதாகவும், அதனை குறித்து தகராறு ஏற்பட்டு வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அதை தொடர்ந்து ஷமில் பாஷாவின் குடும்பத்தார் ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன்.

அங்கிருந்து பழனி எங்களுக்கு தகவல் கொடுத்தார். நான் ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்தேன். அந்த காவல் நிலைய அதிகாரிகள் ஷமில் பாஷா வந்துள்ளதாக சொன்னார்கள். அவர்களை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அனுப்பும்படி நான் கேட்டுக்கொண்டேன்.

16.06.2015 ல் ஷமில் பாஷா, அவருடைய அப்பா ஷாஜகான், அவருடைய மாமா பெயர் ஞாபகம் இல்லை, 3 பேர்கள் வந்தார்கள். நான் ஷமில் பாஷாவை அழைத்து என்ன நடந்தது என்று விசாரித்தேன். ஷமில் பாஷா, என்னிடம் பவித்ரா ஏற்கனவே தன்னுடன் ஷீ கம்பெனியில் வேலை பார்த்ததாகவும், அந்த பழக்கத்தில் ஈரோடு வந்ததாகவும், பண உதவி கேட்டதாகவும், தன்னிடம் இருந்த சிறு பணத்தை கொடுத்து அவருக்கு புத்திமதி சொல்லி ரெயிலில் ஏற்றி அனுப்பியதாகவும், அந்த தகவலை பவித்ராவின் அம்மாவிடம் போன் செய்து சொன்னதாகவும் சொன்னார்.

அவர், பவித்ராவின் தாயாருக்கு சொன்னதின் அடிப்படையில் தான் அவருடைய தொலைபேசி எண்ணை CDR எடுத்து பவித்ராவின் குடும்பத்தார் ஷமில் பாஷாவின் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ததாக சொன்னார். இந்த தகவலை பள்ளிகொண்டா காவல் நிலைய ஆய்வாளர் திரு.மார்ட்டின் பிரேம்ராஜ் (1ம்எதிரி) இடம் சொன்னேன். அப்போது அவர் ஆம்பூரில் செம்மர கடத்தல் shadow duty ல் இருந்தார். அப்போது 1ம் எதிரி, ஷமில் பாஷாவை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருக்கும்படி என்னிடம் சொன்னார். அவர் வந்து

விசாரிப்பதாக சொன்னார். ஷமில் பாஷாவை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருக்க சொன்னார். அதன்பின்னர் 1ம் எதிரி ஷமில் பாஷாவை அன்று மாலை வந்து விசாரணை செய்தார். 16.06.2015 தேதியாகும். ஷமில் பாஷா என்னிடம் சொன்ன விஷயத்தை தான் 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜிடம் சொன்னார்.

ஷமில் பாஷாவின் தந்தையாரும், மாமாவும், 1ம் எதிரி, ஷமில் பாஷாவை விசாரிக்கும்போது இருந்தார்கள். ஷமில் பாஷா பொய் சொல்கிறான் என்று 1ம் எதிரி யோசித்து, ஷமில் பாஷாவை காவல் நிலையத்திலேயே இருக்க சொல்லி, மீண்டும் 1ம் எதிரி ஆம்பூருக்கு shadow duty க்கு சென்றார். அன்று இரவு ஷமில் பாஷா பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் Hall–ல் இருந்தார். ஷமில் பாஷாவின் தந்தையாரையும், மாமாவையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டோம். தேவைப்படும்போது அழைப்பதாக சொன்னோம். Special team இருந்த போலிசார் அனைவரும் shadow duty ல் இருப்பதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள்.

மறுநாள் 17.06.2015 அன்று 1ம் எதிரி பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்து ஷமில் பாஷாவை விசாரித்தார். ஷமில் பாஷா முதல்நாள் சொன்ன விஷயத்தை தான் சொன்னார். அப்போது பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு, பள்ளிகொண்டா பாலத்தின் ஓரம் ஆற்றுக்கு செல்லும் வழியில் ஒரு பொலிரோ வண்டி யாரும் இல்லாமல் இருப்பதாக ஒரு போன் அழைப்பு வந்தது.

அதை தொடர்ந்து பாரா காவலர் சீனிவாசனையும், friends of police ஒரு பையனையும் பார்த்துவிட்டு வந்து தகவல் சொல்ல அனுப்பினோம். அவர்கள் பொலிரோ வண்டியுடன் ஒரு நபரை அழைத்து வந்தார்கள். பின்னர் 1ம் எதிரி ஆய்வாளர், சீனிவாசனையும், friends of police பையனையும், பொலிரோ வண்டியில் வந்த நபரையும் விசாரணை செய்தார். அவர்களை விசாரித்த பின்னர், ஷமில் பாஷாவையும் 1ம் எதிரி விசாரணை செய்தார். பின்னர் நான் ரெஸ்ட் டியூட்டிக்காக வீட்டிற்கு சென்றேன்.

மீண்டும் மாலை 6, 7 மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தேன். பள்ளிகொண்டா காவல் நிலைய பாரா காவலர் சீனிவாசனையும் ரைட்டர் முத்துகுமரனையும், ஷமில் பாஷாவையும், பொலிரோ வண்டியில் வண்டி ஒரு நபரையும் காணோமே என்ன ஆனது என்று கேட்டேன். அதற்கு அந்த 2 காவலர்களும், 1ம் எதிரி அவர்களை எங்கேயோ அழைத்து சென்றதாக சொன்னார்கள். காவல் நிலையத்தில் இருந்த பிரிகேட்டர் சிவானந்தத்தை நான் கேட்டபோது, 1ம் எதிரி, ஷமில் பாஷாவையும், பொலிரோ வண்டியில் வந்த நபரையும் காவலர் குடியிருப்பில் வைத்து விசாரிப்பதாக சொன்னார்.

பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவில் காவலர் குடியிருப்பு உள்ளது. 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ் காவலர் குடியிருப்பில் அந்த 2 நபர்களை வைத்து விசாரித்தார். அந்த காவல் ஆய்வாளர் காவலர் குடியிருப்பு நாட்டு ஓடு போட்ட பழைய வீடாகும். தற்போது அது இடித்து புதிய கட்டிடம் உள்ளது.

19.06.2015 ம் தேதி நான் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்தபோது, 1 ம் எதிரி காவல் ஆய்வாளர், ஷமில் பாஷாவை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார். அதை நான் பார்த்தேன். அப்போது நான் காவல் நிலையத்தில் இருந்தேன். அப்போது அந்த காவல் நிலையத்தில் ஷமில் பாஷாவின் மாமா, அவருடைய தந்தையார் மற்றும் அவருடைய தெரிந்த நபர் முரளி ஏற்கனவே காவல் நிலையத்தில் இருந்தனர்.

1 ம் எதிரி, ஷமில் பாஷாவை பவுண்டுஓவர் செய்து ஷமில் பாஷாவை அவர் உறவினர்களிடம் அனுப்பும்படி சொன்னார். உத்தரவிற்கிணங்க ஷமில் பாஷாவிடமும், அவர் உறிவனர்களிடமும் பவுண்ட் ஓவர் பெற்று அவர் உறவினர்களிடம் மதியம் 2 மணிக்கு அனுப்பி வைத்தேன்ங. அ.சா.ஆ.13 ல் உள்ள நபர் தான் ஷமில் பாஷா என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். அப்போது ஷமில் பாஷா கை வலிப்பதாக சொன்னார். கையெழுத்து போட முடியாது என்றும், கைநாட்டு வைப்பதாக சொல்லி கைநாட்டு வைத்தார். ஷமில் பாஷாவின் வலது கை வீக்கமாக இருந்தது.

16.06.2015 ம் தேதி நான் காவல் நிலையத்திலிருந்து ரெஸ்ட் டியுட்டிக்கு வீட்டுக்கு செல்லும்போது ஷமில் பாஷா கையில் எந்தவித வீக்கமும் இல்லை. மேற்படி ஷமில் பாஷாவை நான் பவுண்ட் ஓவர் செய்ததற்கான ஆவணம் அ.சா.ஆ.20 ஆகும். அந்த ஆவணத்தில் ஷமில் பாஷாவின் தந்தையார், மாமா, நண்பர் முரளி ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து போட்டு ஷமில் பாஷாவை அழைத்து சென்றார்கள்.

அன்றைய தினமே ஷமில் பாஷாவிற்கு உடம்பு சரியில்லை என்றும், கை கால்களில் பிரச்சனை என்று ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக தகவல் சொன்னார்கள். ஷமில் பாஷாவின் உறவினர்கள் ஆம்பூரில் ஆர்ப்பாட்டம் செய்வதாக ஆம்பூர் காவல் நிலையத்திலிருந்து, பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது. பிறகு நான் வேறு பணிக்கு சென்றுவிட்டேன்.

27.06.2015 அன்று ஷமில் பாஷாவின் உடல்நிலை மோசமாகி சென்னை மருத்துவமனைக்கு எடுத்து சென்று அங்கு இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. அப்போது நான் வேறு பணியில் இருந்தேன். 1ம் எதிரி அவருடைய பள்ளிகொண்டா காவலர் குடியிருப்பான அவருடைய நாட்டு ஓடு போட்ட வீட்டில் தங்கியிருப்பார். 1ம் எதிரி தனியாகத்தான் இருந்து வந்தார். அவருடைய குடும்பம் அங்கில்லை.

2014ம் வருடம் முதல் 2016 வருடம் வரை நான் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன். 16.06.2015 அன்று நான் காலை 8 மணிக்கு காவல் நிலையத்தில் பணிக்கு சேர்ந்து அதை General Diaryல் பதிவு செய்யப்பட்டது. வரிசை எண்.9986565 என்ற வரிசை எண் கொண்ட பள்ளிகொண்டா காவல் நிலைய G.D. புத்தகத்தின் ஆவணம் அ.சா.ஆ.21 ஆகும். 16.06.2015 முதல் 18.06.2015 வரை பள்ளிகொண்டா காவல் நிலைய பொது நாட்குறிப்பு பதிவை நான் பார்த்தேன்.

மேற்படி ஷமில் பாஷாவை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் வைத்து விசாரித்ததற்கு தினசரி நாட்குறிப்பேட்டில் நான் அதை

பதியவில்லை. 1ம் எதிரி அதைப்பற்றி தினசரி நாட்குறிப்பில் பதிய வேண்டாம் என சொல்லவில்லை. ஷமில் பாஷா இருந்தது பற்றி தினசரி நாட்குறிப்பில் பதியலாமா என்று நான் 1ம் எதிரியிடம் கேட்கவில்லை. 19.06.2015ம் தேதி தினசரி நாட்குறிப்பு பதிவேடு பொறுப்பை காலை 8 மணிக்கு முடித்து, சிங்காரம் என்பவரிடம் ஒப்படைத்தேன். பின்னர் வேறு பணிக்கு நான் சென்றுவிட்டேன். பின்னர் வீட்டிற்கு சென்று மீண்டும் பணிக்கு அன்றே துவங்கினேன். பின்னர் CBCID police DSP Anandakumar என்னை விசாரணை செய்தார். நடந்ததை சொன்னேன்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.09 17:41:22 +0530